## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.65/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குருநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : சங்கர ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : வங்கி பணி (ஓய்வு) | வட்டம் | : திருத்தணி |

<u>18.02.2026</u>

<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

11. பி அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்பதை நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் இல்லை. அது போக வர வழியாகும். நான் எனது குறுக்கு விசாரணையிலேயே பி அட்டவணையில் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருவதை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றாலும் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. A அட்டவணை சொத்தின் நான்கு எல்லை தெரியுமா என்றால் ஆறுமுகசாமி கோயில் தெருக்கு கிழக்கு 2ம் இலக்க சொத்திற்கு மேற்கே, வேலு வீட்டிற்கு தெற்கே, முத்தாயி வீரராகவ ரெட்டியார் வீட்டிற்கு வடக்கே இதற்கு மத்தியில் தெற்கே 1 1/4 அடி சுவர் உட்பட வடக்கு தெற்கு 4 1/4 அடி கிழக்கு மேற்கு 42 அடியாகும். இது பின்னால் உள்ள 2, 3 இலக்க சொத்திற்கு போக வர வழியாகும்.

12. A அட்டவணையில் உள்ள 3ம் இலக்க சொத்து எனது வீடு என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்திற்கான பட்டா, சிட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேவைப்படவில்லை. எனவே தாக்கல் செய்யவில்லை. வருவாய் ஆவணங்களே இல்லாமல் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு பி

அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி வீடுகட்டி அனுபவித்து வருகிறார் என்றாலும் கிராம நத்தத்தில் நான் ஆட்சேபணை செய்கிறேன் என்றாலும் சரியல்ல. அதில் எனக்கும் உரிமையுள்ளது. கிராம நத்தத்தில் ஆக்கிரமிப்பு இருந்தால் அரசாங்கம்தான் ஆட்சேபணை தெரிவிக்க முடியும் என்றாலும் எனக்கு ஆட்சேபணை தெரிவிக்க எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. குடியிருப்பாக ஒதுக்கப்பட்ட கிராம நத்தத்தில் நாங்கள் உயில் தயாரித்து அதன்பேரில் செட்டில்மெண்ட் தயாரித்துள்ளோம் என்றால் எங்கள் பகுதியில் யாருக்கும் பட்டாவே கொடுக்கவில்லை. நான் எந்த வருவாய் ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)